Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 159 | புதன்கிழமை 04 மே 2022 | சித்திரை 21 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ. 50

# அரசியல்வாதிகளின் ஊழல்களை அம்பலப்படுத்தினார் அநுரகுமார!

## ஆவணங்களுடன் வெளிப்படுத்தியதால் அரசியல் களத்தில் பெரும் அதிர்வு

**கொழும்பு, மே 4**

**இலங்கையின் முக்கியமான அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் ஊழல் மோசடிகள் தொடர்பாக தகவல்கள் பல அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. நேற்றுக் கொழும்பில் 'ஊழல் எதிர்ப்பு குரல்' என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பல ஊழல் மோசடிகள் தொடர்பான தகவல்களை வெளியிட்டதுடன் பல ஆவணங்களையும் பகிரங்கப்படுத்தினார்.** 15 >



## பட்டப்பகலில் வீடு உடைத்து நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 4

உரும்பிராய் தெற்கில் நேற்றுப் பட்டப்பகலில் வீடு உடைத்துத் தங்க நகைகள், பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு 15 >

## கிணற்றில் வீழ்ந்து ஒருவர் நேற்றுச் சாவு!

### முல்லைத்தீவில் பரிதாபம்

முல்லைத்தீவு, மே 4

கிணற்றில் தவறுதலாக வீழ்ந்து கடற்றொழிலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம்நேற்று முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் நடந்துள்ளது. 15 >

## ரயில்வே தொழிற்சங்கம் நாளைமுதல் போராட்டம்

கொழும்பு, மே 4

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி மக்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் நாளைமறுதினம் நடத்தப்படவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து, நாளை நள்ளிரவு முதல் 24 மணி நேரத்துக்கு ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு பணிப் 15 >

## பதவி துறக்கிறார் மஹிந்த ராஜபக்ச?

கொழும்பு, மே 4

மஹிந்த ராஜபக்ச இன்று பிரதமர் பதவியில் இருந்து விலகவுள்ளார். கொழும்பில் நேற்று நடந்த சந்திப்பொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது என்று அந்தச் சந்திப்பில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன உறுதிப்படுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியினருக்கும், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அணிகளின் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல், ஐக்கிய 15 >

## தவறணையில் மோதல்: இளைஞருக்கு கத்திக்குத்து

கொழும்பு, மே 4

காரைநகர், கசூரினா கடற்கரையில் அமைந்துள்ள தவறணை ஒன்றில் இளைஞர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் 15 >

## தமிழகம் செல்ல முயன்ற வவுனியாவாசிகள் கைது!

யாழ்ப்பாணம், மே 4

சட்டவிரோதமாக தமிழகத்துக்குச்செல்ல முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், வேலணையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் 15 >

## கோத்தா அரசுக்கு எதிரான பிரேரணைகள் சமர்ப்பிப்பு!

கொழும்பு, மே 4

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராகவும், அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த இரு பிரேரணைகளும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளன. இதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேரில் களமிறங்கியிருந்தார். அவர் தலைமையிலான குழுவில் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும 15 >

## சாவகச்சேரி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

### நேற்று அதிகாலை சம்பவம்

சாவகச்சேரி, மே 4

சாவகச்சேரியில் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த 15 >



## ஊழல் அரசை விரட்டுவதற்கு அனைவரும் கைகோர்ப்போம்

### தேசிய தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் அழைப்பு

கொழும்பு, மே 4

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள நாடு தழுவிய ஹர்த்தாலுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தேசிய தொழிற்சங்க ஒருங்கிணைப்பு 15 >

MOBILE
ஆற்றலை அதிகரிக்கும் மேம்படுத்தப்பட்ட
SLT-MOBITEL
Selfcare 4.0.0!
Google Play
App Store
SLTMOBITEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் விவகாரம்: விரைவில் நிரந்தரத் தீர்வு

## யாழ். மீனவர்களுக்கு அண்ணாமலை வாக்குறுதி

**யாழ்ப்பாணம், மே 4**

**இலங்கை - இந்திய மீனவர்களின் விவகாரம் தொடர்பில் விரைவில் நிரந்தரத் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் கு.அண்ணாமலை, யாழ். மாவட்ட மீனவர்களுக்கு உறுதியளித்தார்.**



யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள அவர் தனியார் விடுதியொன்றில் யாழ்.மாவட்ட மீனவப் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் மீனவப் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் இழுவை மடித் தொழிலை முற்றாக நிறுத்த வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். அது தொடர்பில் இந்தியாவுக்குச் சென்று கடற்றொழில் வளத்துறை அமைச்சருடன் கலந்துரையாடி நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்தார். இழுவைமடி இந்திய படகுகளுக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை ஆவணமாகக் காட்டினோம். கோடிக்கணக்கில் மீனவர்களுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதையும் எடுத்துக் கூறினோம் - என்றனர்.

சந்திப்பில் யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் சம்மேளன உபதலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம், நெடுந்தீவுக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் ப.லீலியான் குருஸ், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் சம்மேளனப் பொருளாளர் சிவஞானராசா மகேஷ், காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் கந்தசாமி இராஜச்சந்திரன்,செயலாளர் திருநாவுக்கரசு பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-125)

## அரசாங்கத்துக்கு எதிராக மதகுருமார் போராட்டம்

ஹற்றன், மே 4

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி, மலையக இந்து மதகுருமார்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஹற்றன் - மல்லியப்புச் சந்தியிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அருகில் கதுரட ஐயப்பன் குருமார்கள் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் முதல் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

74 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்ட அரசியல்வாதிகள் நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டனர். மக்களின் வளங்களை அபகரித்துவிட்டனர். தற்போதைய 225 நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணமுடியாது. புத்திசாலித்தனமான குழுவைத் தெரிவு செய்து 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியலிலிருந்து விலகவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (க-இ)



## இந்து ஆலயங்களின் சாபத்தையே இன்று இலங்கை அனுபவிக்கிறது!

*ஆறு. திருமுருகன் ஆதங்கம்*

யாழ்ப்பாணம், மே 4

எந்தவிதப் பூசை வழிபாடுகளும் இன்றி சுமார் 30 வருடங்களுக்கு மேலாக பூட்டப்பட்ட இந்து ஆலயங்களின் சாபத்தை இன்று இலங்கை அனுபவிக்கின்றது என்று சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலையை, நல்லை ஆதீன குருமுதல்வர் சந்நிதானத்தில் சந்தித்த போதே ஆறு.திருமுருகன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

காங்கேசன்துறைப் பகுதியில் மக்களின் காணிகளைப் பறித்து ஆடம்பர ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்டுள்ளது. அங்கு மக்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. அங்கு காணப்படுகின்ற நான்குக்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் இன்னும் பூசை வழிபாடுகள் இன்றிப் பூட்டப்பட்டுள்ளன. அதனுடைய சாபங்களே இன்றைய நாட்டின் நிலைமைக்குக் காரணமாகும்.

ஆட்சியாளர்கள் அவற்றை விடுவித்து பூசை வழிபாடுகள் இடம்பெற அனுமதிக்கவேண்டும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மக்கள் தீர்வு விடயத்தில் அக்கறையாகவுள்ள நிலையில், அவருடைய ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்குரிய தீர்வு கிடைக்க வேண்டும் - என்றார். (க-27)

## நெதுன்கமுவ ராஜா தேசிய உடைமை!

கொழும்பு,மே 4

பெரஹராவின் புனித பேழையைத் தாங்கி உற்சவ வீதி உலா சென்ற மங்கலகரமான தந்த யானையான நெதுன்கமுவ ராஜாவை, தேசிய உடைமையாகப் பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

நாட்டில் பிரதான வணக்கத் தலங்கள் பலவற்றில் பெரஹரா உற்சவங்களில் கலந்துகொண்டதுடன், 13 தடவைகள் ஸ்ரீதலதா மாளிகை பெரஹராவின் புனித பேழையைத் தாங்கி உற்சவ வீதி உலா சென்ற நெதுன்கமுவ ராஜா கடந்த மார்ச் மாதம் உயிரிழந்தது. இதனையடுத்து குறித்த தந்த யானையின் இறந்த உடலைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டின் கலாசார வைபவங்களில் வழங்கிய ஒத்துழைப்புக்களைக் கருத்திற்கொண்டு நெதுன்கமுவ ராஜா எனும் தந்த யானையை தேசிய உடைமையாகப் பிரகடனப்படுத்துவதற்காக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க-இ)

## நிறுவனப் பிரதிநிதிகளை சந்தித்தார் அண்ணாமலை

யாழ்ப்பாணம், மே 4

பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கியஸ்தர் அண்ணாமலை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை யாழிலுள்ள தனியார் விடுதியில் சந்தித்தார்.

இதன்போது தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதிலிருந்து மீள்வதற்கான வழிகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் யாழ்ப்பாணம் - பலாலி சர்வதேச விமான நிலையத்தை மீளத் திறப்பதற்கும் காங்கேசன்துறையிலிருந்து காரைக்காலுக்கான கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையடங்கிய ஒப்பந்தம் நரேந்திர மோடியிடம் கையளிப்பதற்காக அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (ம-14,27)

## தரமற்ற எரிபொருளெனின் முறையிடுக!

கொழும்பு, மே 4

நாட்டில் விநியோகிக்கப்படும் எரிபொருள் தரம் தொடர்பாக ஏதேனும் சந்தேகம் காணப்படுமாயின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்க இரு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 011 5234234 மற்றும் 011 5455130 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ய-இ)

## ரஞ்சனின் விடுதலைக்காக வீதிக்கு இறங்க நேரிடும்!

*சஜித் தெரிவிப்பு*

கொழும்பு, மே 4

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோருவதற்குப் பதிலாக, அவரது விடுதலைக்கான போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

ரஞ்சன் ராமநாயக்க ஒருபோதும் சிறையில் இருக்கவேண்டிய மனிதரல்லர். அவருக்கு நீதி பெற்றுத் தரப்படும் என ஜனாதிபதி பல தடவைகள் கூறிய போதிலும், இதுவரையில் ஏமாற்றமே வழங்கப்பட்டுள்ளது. அவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும், இதுவரை அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை- என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேச ஊடக சுதந்திர தினம் உலக நாடுகளில் கடைப்பிடிப்பு!







லண்டன், மே 3

**சர்வதேச ஊடக சுதந்திர தினம் உலக நாடுகளில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. ஊடகங்களின் சுயாதீனத் தன்மையையும் சுதந்திரத்தையும் வலியுறுத்திப் பேரணிகளும் நடத்தப்பட்டன.**

அமெரிக்காவின் நியூயோர்க் நகரம், அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் எனப் பல பிரதேசங்களில் இந்த ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடத்தப்பட்டன,

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். ஜனநாயகம் என்பதே ஊடக சுதந்திரம் தான் உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச மற்றும் பயங்கரவாத அடக்முறைகளால் உயிரிழந்த ஊடகவியலாளர்களின் ஒளிப்படங்களும் இந்தப் பேரணிகளில் எடுத்துச் செல்லப்பட்டன.

பிரிட்டனில் சிறையிடப்பட்டுள்ள விக்கி லீக்ஸ் நிறுவனத்தின் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே விடுவிக்கப்படவேண்டும் என்று பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் இடம்பெற்ற பேரணிகளில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினர். (ம)

# செயலிழந்தது நுரைச்சோலை

கொழும்பு, மே 4



நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையமொன்றில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தற்காலிகமாகச் செயலிழந்துள்ளது. தற்போது திருத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. 5 நாள்களுக்குள் குறித்த அனல்மின் நிலையம் மீண்டும் தேசிய மின்தொகுப்புடன் இணைக்கப்படும். எனினும் மின் தடை நீடிக்கப்படாது. இந்தச் செயலிழப்பு காரணமாக தேசிய மின்வாரியமானது 270 மெகாவாட்ஸ் மின்சாரத்தை இழக்கும் - என்றார். (க-இ)



# 'உதயன்' ஊடகப் படுகொலை 16ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 4

உதயன் அலுவலகத்தில் 2006ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி (ஊடக சுதந்திர தினத்துக்கு முதல்நாள்) மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் உதயன் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் உதயன் அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் நடத்திய கொலை வெறியாட்டத்தில் இரு உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. உதயன் விற்பனை முகாமையாளரான பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாசன் மற்றும் விநியோக ஊழியரான ரஞ்சித்குமார் ராஜரட்ணம் ஆகிய இருவருமே மர்ம நபர்களால் கொல்லப்பட்டனர். அவர்களின் 16ஆவது நினைவேந்தலே உதயன் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. (ம)

## நாணய நிதிய விவகாரம்: நிதியமைச்சர் இன்று உரை

கொழும்பு, மே 4

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற பேச்சின் முன்னேற்றம் குறித்து நிதியமைச்சர் அலி சப்ரி, நாடாளுமன்றில் விசேட உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் மூன்று நாள்களுக்கு நாடாளுமன்றம் கூடவுள்ளது. புதன்கிழமையும் வியாழக்கிழமையும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியினர் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் சமர்ப்பிக்கவுள்ளனர். (க-இ)

# எதிர்க்கட்சியின் பிரேரணையை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்

கொழும்பு, மே 4



அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள அரசாங்கம் தயார் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை - மக்கள் பிரதிநிதிகளாக மக்களின் வாக்குகளில் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள், மக்களின் மேம்பாட்டுக்காகச் செயற்படு

கிறார்களா என்ற கேள்வி மக்கள் மத்தியில் இன்று காணப்படுகின்றது என்று அமைச்சர் விதுர விக்ரம நாயக்க தெரிவித்துள்ளார். (க-இ)

இப்பவெல்லாம் இலங்கைப் பார்லிமெண்டில நடக்கிற ஒவ்வொண்டும் ஏதோ பேய்ப் படம் பாக்கிறமாதிரி -திக் திக்- எண்டுதான் இருக்குது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு மாற்றம், திடீர் திருப்பங்கள், மாறி மாறி பல்டியடிப்புகள், சண்டைகள், ஏச்சுப் பேச்சு எண்டு பார்லிமெண்ட் களை கட்டியிருக்கு. இந்த அமளி காணாதெண்டு நேற்றைக்கு ரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை சபாநாயகரிட்ட சஜித் குடுத்திருக்கிறார். இனி உந்த ரண்டையும் வைச்சு பார்லிமெண்ட் அதிர்ந்து கொண்டே இருக்கப் போகுது.

அதுக்கிடையில, இண்டைக்கு பார்லிமெண்ட் கூடின உடனேயே எல்லா எம்.பிமாருக்கும் ஒரு சோதினை இருக்கு. பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்யிறதுதான் இண்டைக்கு பார்லிமெண்டில முதல்வேலை. எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியும் தங்கட பவரை இந்த பிரதி சபாநாயகரை தெரிவு செய்யிறதிலதான் காட்டப் போகினம் எண்டு கதை. அதுக்குள்ள இடையால உந்தச் சுயாதீன எம்.பிக்கள் எண்டு சொல்லிக்கொள்ளுற, பெரமுனவில இருந்து விலகி இருக்கிறவையும் தங்கட பங்குக்கு ஓராளை உந்தப் பதவிக்கு இறக்கி விட்டு வேடிக்கை பாக்கப் போகினம் எண்டும் கதை. அப்பிடிப் பார்த்தால் மும்முனைப் போட்டி நடக்கலாம். இப்பிடி குறுக்கால ஓராளை சுயாதீனமான இயங்கிறவை கொண்டாறதால நட்டமென்னவோ எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குத்தான். ஏனெண்டால் தங்கட பக்கத்தால நிக்கவைக்கிற ஆளைத்தான் சுயாதீனமா இயங்கிறவையும் கை உயர்த்தி செலக்ட் பண்ணுவினம் எண்டு நம்பிக் கொண்டிருந்திச்சினம். அப்பிடி அவை சப்போர்ட் பண்ணாட்டி, -சுயாதீனமாய் இயங்குகினம் எண்டு நாடகமாடிக் கொண்டு அரசாங்கத்துக்குச் சார்பாத்தான் நடக்கினம்- எண்டு அவையை ஓரங்கட்டி இருக்கலாம்.

ஆனால் இப்பிடி அவை மூண்டாவதா ஓராளை இறக்கினால் அப்பிடி ஒண்டும் செய்ய ஏலாமல் போடும். இப்பிடி எல்லாம் தொங்குபறி நிலையில இருக்கேக்க எங்கட கூட்டமைப்புக்காரரும், முன்னணிக்காரரும், விக்கினேஸ்வரனும் எந்தப் பக்கம் நிக்கப் போயினம் எண்டதும் இப்ப ஆகப்பெரிய கேள்வி. கூட்டமைப்பின்ர சப்போர்ட் எங்களுக்குத்தான் எண்டு ரண்டு தரப்பும் நம்பிக் கொண்டிருக்கு. அதுக்கேத்தமாதிரிதான் கூட்டமைப்புக்காரரும் பிடிகுடுக்காமல் கதைச்சுக் கொண்டிருக்கினம். உண்மையும் அதுதான். நேற்று இரவு வரைக்கும் எந்தப் பக்கம் சப்போர்ட் பண்ண வேணும் எண்டதில கூட்டமைப்புக்குள்ளையே முடிவெடுக்கேலையாம். சிலவேளை பார்லிமெண்டுக்கு போறவழியிலதான், கொன்பரன்ஸ் கோலில கதைச்சுத்தான் முடிவெடுப்பினம் போல. பெரும்பாலும் இண்டைக்கு கூட்டமைப்பு நடுநிலைமை வகிக்கத்தான் சான்ஸ்கூட எண்டும் ஒரு கதை அடிபடுகுது. ஆனாலும் அரசியலில கடைசி நேரத்தில என்ன வேணுமெண்டாலும் நடக்கலாம்.


எதுக்கும் நடக்கிறதை வேடிக்கை பார்க்கிறது மட்டும் தான் இப்ப நல்லமுடிவு.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காட்டு யானைகளால் பயிர்களுக்கு பேரழிவு

## விவசாயிகள் கவலை

**கிளிநொச்சி, மே 4**

**கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில், நேற்றுமுன்தினம் நுழைந்த காட்டு யானைகளால் பெருமளவு பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அந்தப் பகுதி விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது: காட்டு யானைகளால் பயிர்கள் அழிக்கப்படுவது எமது பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. எத்தனையோ தடவைகள் இது தொடர்பில் நாம் தெரிவித்தும் முறையான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

அறுவடைக்கு சில நாள்கள் உள்ள நிலையில் 3 ஏக்கரில் பயிரிடப்பட்ட பூசணிச் செடிகள், மரவள்ளிச் செடிகள், தர்ப்பூசணிப்பழங்கள், பயன்தரு தென்னைகள் என ஏராளமான பயிர்கள் மற்றும் மரங்கள் நேற்று (நேற்றுமுன்தினம்) நுழைந்த மூன்று யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன.

8 லட்சத்துக்கும் அதிகமான பணத்தை செலவிட்டு மேற்கொண்ட பயிர்களை துவம்சம் செய்துள்ள யானைகள், வீட்டுத் தோட்டத்திலுள்ள வாழைமரங்கள், நிலக்கடலை ஆகியவற்றையும் விட்டுவைக்கவில்லை.

எனவே உரிய அதிகாரிகள் இதற்கு ஒரு காத்திரமான நடவடிக்கை எடுத்து எமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தித் தரவேண்டும். மின்சார வேலியை அமைத்து யானைகளின் தாக்குதலில் இருந்து எமது பயிர்களைக் காப்பற்றி தர வேண்டும் -என்றனர். (ம-14-113)

# பண்டத்தரிப்பு அம்மன் வீதியை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 4

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பண்டத்தரிப்பு அம்மன் வீதியை சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது

இந்த வீதி நீண்டகாலமாக சீரமைப்பின்றிய நிலையில் காணப்படுகின்றது. பண்டத்தரிப்புக்கு செல்வதற்கு சில்லாலை, பனிப்புலம், சாந்தை என பல கிராம மக்கள் பயன்படுத்துகின்ற ஒரு பிரதான வீதி இதுவாகும். இந்த வீதியில் மழை காலங்களில் வெள்ளம் 4 அடிக்கு மேலாக தேங்கி நிற்பதால் கீரியன் தோட்ட வீதியூடாகவே எமது போக்குவரத்தை மேற்கொள்கின்றோம்.

இது தொடர்பில் வலி.தென்மேற்கு பிரதேசபைத் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபனேசனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் திட்டத்துக்குள் குறித்த வீதி உள்வாங்கப்பட்டதாகவும் இதுவரை சீரமைப்பு செய்யாமல் காணப்படுவதாகவும் தெரிவித்தார் -என்றனர். (ம-14-125)

# மோ.சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்

சாவகச்சேரி, மே 4

சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வீதியின் குறுக்கே வந்த நாய் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 61 வயதான தந்தையும் 21 வயதான மகனும் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-14-9)

# மன்னார் காற்றாலை செயற்றிட்டம்: மக்கள் சந்திப்பின் பின்னர் அறிக்கை

## பேராசிரியர் தெரிவிப்பு

மன்னார், மே 4

மன்னார்த் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் மின் காற்றாலைத் திட்டத்தை முடிவுறுத்தும் அறிக்கை, மாவட்டத்தின் 10 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் சமர்ப்பிக்கப்படும் என்று யாழ். பல்கலைக்கழக சமூகவியல் திணைக்களப் பேராசிரியர் சுப்பிரமணியம் ஜீவகன் தெரிவித்தார்.

மன்னார்த் தீவில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின் காற்றாலைகளால், தீவு மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக மன்னார் பிரஜைகள் குழு, மக்கள் சார்பாக குரல் கொடுத்து வருகின்றது. இது தொடர்பாக இறுதி அறிக்கை தயாரிக்கும் நோக்குடன் யாழ். பல்கலைக்கழக சமூகவியல் திணைக்களப் பேராசிரியர், ஆளுநர் குழுவைச் சந்தித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டம் தொடர்பில் நடத்தப்பட்ட கூட்டங்களில் மன்னார்த் தீவில் காற்றாலை அமைப்பதால் பல தரப்பட்ட பாதிப்புக்கள் இருப்பதால், இவற்றை நிர்மாணிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு முடிவு எடுக்கப்பட்டிருந்தது. யாழ். பல்கலைக்கழகத்தில் இது தொடர்பான அறிக்கை கோரப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது. மக்கள் மற்றும் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு அதன் பின்னரே அறிக்கை சமர்ப்பிக்கப்படும். மக்கள் எதைச் சொல்கின்றார்களோ அவற்றைத்தான் நாங்கள் அறிக்கையிடுவோம். பலர் காற்றாலைச் செயற்றிட்டத்தை எதிர்க்கின்றனர். யாழ். பல்கலைக்கழகம் நடுநிலையுடன் செயற்படும் -என்றார். (க-60)

# சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சைக்கான அனுமதி அட்டையைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளுக்கான விசேட பரீட்சைகள், எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணி, முற்பகல் 11 மணி மற்றும் பிற்பகல் 12.30 மணி என்ற ஒழுங்கில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

எனவே சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக மே மாதம் 31ஆம் திகதி வரை அனுமதி அட்டையைப் பெற்றுக் கொண்டவர்கள், குறித்த தினங்களில் பரீட்சை அனுமதி அட்டையுடன் அதன் போட்டோபிரதி, தேசிய அடையாள அட்டை, மருத்துவச்சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகைதந்து பரீட்சைக்குத் தோற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# மகா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, மே 4

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று காலை 8.05 மணி முதல் 10.35 மணி வரை இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக பிரதம குரு 'கிரியா ரத்தினா' சிவஸ்ரீ ராம் சண்முகானந்தக் குருக்கள், ஆலய பிரதம குரு 'சர்வபோதகம் பண்டிதர்' கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ ஜெகதீஷ மயூரக்குருக்கள், சிவஸ்ரீ சோ.பிரசன்னாக்குருக்கள் ஆகியோரின் தலைமையில் கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ம-14)

# வடக்கில் கண்ணிவெடியகற்றல்; சார்ப் நிறுவனத்தால் துரிதகதி

வடக்கு மாகாணத்தில் இரண்டு மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்தியுள்ளது சார்ப் நிறுவனம்.

ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாடுகளின் நிதியுதவியுடன், மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் குறித்த நிறுவனம், 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 20 லட்சத்து 51 ஆயிரத்து 80 சதுரமீற்றர் பரப்பளவி[illegible] வெடி [illegible]

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதிகளிலும், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன என்று நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் முகமாலை மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் பகுதியிலும், அம்பகாமம் பகுதியிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நேர்ந்தாலும் மஹிந்தவே பிரதமர்



## ■ பஸில் தெரிவிப்பு

கொழும்பு, மே 4

**மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியை வகிக்க வேண்டும் என்பது கடந்த தேர்தலில் பொதுஜன பெரமுன ஏற்படுத்திய இணக்கப்பாடு. இந்த முடிவு எப்போதும் மாறாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.**

மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று, பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகத் தீர்மானம் எடுக்கலாம்.

அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால், புதிய அரசாங்கத்தின் புதிய பிரதமருக்கான வேட்பு மனுக்களை கட்சித் தலைமைக் குழு கோரினால், மஹிந்த ராஜபக்சவைத் தவிர வேறு யாரையும் பொதுஜன பெரமுன முன்னிறுத்தாது.

மக்கள் ஆணையைத் தவிர வேறு யாரையும் நியமிக்க பொதுஜன பெரமுன தயாராக இல்லை - என்றார். (க-இ)



## போராட்டக்காரர்களை விரட்ட தயாராகின்றது அரசாங்கம்

### பொன்சேகா தகவல்

கொழும்பு, மே 4

அரசாங்கத்துக்கு எதிராக மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் வலுவடைந்துள்ள நிலையில், அவர்களை விரட்டியடிக்க அரசாங்கம் தயார்ப்படுத்தல்களை முன்னெடுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

அலரி மாளிகைக்கு எதிரில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அமைதியான அகிம்சைவாத மக்களை, பாதுகாப்புத் தரப்பினரைப் பயன்படுத்தித் தாக்கவும், விரட்டியடிக்கவும் தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் நம்பிக்கையான தரப்பில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால், போராட்டக்காரர்கள் ஒன்றிணைந்து இந்த முயற்சியைத் தோற்கடிக்க வேண்டும்.

போராட்டக்காரர்களே ஒன்றிணையுங்கள். அணிதிரளுங்கள். மக்களின் உரிமைகளை அடக்குமுறையாலும், பொலிஸ் பலத்தாலும் தோற்கடிக்கும் முயற்சிக்கு எதிராகச் செயற்படுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (க-இ)

## மக்களின் எதிர்ப்புகளால் பதுங்குகிறது அரசாங்கம்

### கிரியெல்ல தெரிவிப்பு

அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளதால், வெளியில் நடமாடமுடியாது அரசின் தலைவர்கள் பங்கர்களில் பதுங்கியுள்ளனர் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

69 இலட்ச வாக்குகளால் ஆட்சிக்கு வந்த பொதுஜன பெரமுனவுக்கு இம்முறை மே தினக் கூட்டத்தைக்கூட நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. சுபீட்சமான நாட்டை உருவாக்கப்போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த மொட்டுக் கட்சியால் இன்று நாடு நாசமாகியுள்ளது.

தற்போது அரசாங்கத்தின் தலைவர்களால் வெளியில் செல்ல முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. அதனால் பங்கர்களில் பதுங்கியுள்ளனர். எனவே மக்கள் ஆணையைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டும் -என்றார். (க-இ)

## வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகள்: அமைச்சரவையால் உபகுழு தெரிவு

கொழும்பு, மே 4

நாட்டில் தற்போது நிலவுகின்ற வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாக, வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலான முதலீட்டு வாய்ப்புக்களை அடையாளம் காண்பதற்காக உபகுழுவை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

வாழ்க்கைச் செலவை நிலையான வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும், நடைமுறை ரீதியானதுமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக, ஜனாதிபதியின் தலைமையில் பிரதமர் மற்றும் ஏனைய ஏற்புடைய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் பங்கேற்புடன் உபகுழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சர்களான நாலக கொடஹேவா, திலும் அமுனுகம, கஞ்சன விஜேசேகர, பிரமித பண்டார தென்னகோன், லொஹான் ரத்வத்த ஆகியோருடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (க-இ)

## தாய்லாந்திடம் எரிவாயு: அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 4

தாய்லாந்தின் எரிவாயு நிறுவனத்திடமிருந்து ஒரு வருடத்துக்கு சமையல் எரிவாயுவைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது ஓமான் நாட்டு விநியோகஸ்தரிடம் எரிவாயு கொள்வனவு செய்யப்படுகின்றது.

அந்தக் கொள்வனவுக்கான செலவில் ஒரு மெற்றிக் தொன்னுக்கு 9 அமெரிக்க டொலர் குறைக்கப்பட்டுள்ளது. அதேவேளை வருடத்துக்குத் தேவையான எரிவாயுத் தேவையில் 70 வீதமானவை ஓமான் நிறுவனத்தால் விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## மைனா ஹோ கம போராட்டத்தை பெண்ணொருவர் குழப்ப முயற்சி!

கொழும்பு, மே 4

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மைனா ஹோ கம போராட்டக்களத்துக்குள் பெண் ஒருவர் நுழைந்து, அங்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார்.

அங்கு ஒரு வாரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் கடந்த 5 நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை அணுகிய குறித்த பெண், உணவை உட்கொள்ளுமாறு வற்புறுத்தினார்.

இதனை அவதானித்த போராட்டக்காரர்கள் அந்தப் பெண்ணை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு கோரியுள்ளனர்.

எனினும் அந்தப் பெண் உணவை உட்கொள்ளுமாறு மீண்டும் மீண்டும் இளைஞர்களைக் கோரியுள்ளார். பின்னர் அந்தப் பெண்ணை இளைஞர்கள் சிலர் இணைந்து திட்டி வெளியேற்றியுள்ளனர். அதன்பின்னர் குறித்த பெண் காலி முகத்திடலுக்குச் சென்று அங்குள்ள பொலிஸாருடன் கலந்துரையாடலில் ஈடுபடும் காட்சிகள் வெளியிடப்பட்டுள்ளன. (க-இ)

## இலங்கையை மீட்க சீனா கைகொடுக்கும்

### சீனத்தூதுவர் வாக்குறுதி



கொழும்பு, மே 4

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, தேவையான பங்களிப்பை வழங்க சீனா தயார் என்று இலங்கைக்கான சீனத்தூதுவர் சி ஷென்ஹோங் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் அலி சப்ரியுடன் கொழும்பில் உள்ள நிதியமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியமான பங்குதாரர் என்ற வகையில், உடன்பாட்டை எட்டுவதற்கு, நிதியத்தை ஊக்குவிப்போம். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் இலங்கையின் முயற்சிகளுக்கு சீனா முழுமையான ஆதரவை வழங்கும். கடனை மறுசீரமைப்பதற்கான இலங்கையின் தீர்மானத்தை சீனா ஆதரிக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## இலங்கையை மீட்கக் கோரி அமெரிக்காவில் கையெழுத்து

கொழும்பு, மே 4

ராஜபக்சக்களிடமிருந்து இலங்கையைக் காப்பாற்றக்கோரி, அமெரிக்காவில் உள்ள இலங்கையர்கள் கையெழுத்துச் சேகரித்துள்ளனர். அவை செனட் மற்றும் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக இலங்கையில் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு ஆதரவாக, அமெரிக்காவில் வாழும் இலங்கையர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள இலங்கை மாணவர் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த கண்டனத் தொடரில், அமெரிக்காவில் வாழும் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தங்கள் ஆதரவை வழங்கினர். அமெரிக்காவில் 43 மாநிலங்களில் 50 இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அமெரிக்கக் குடியுரிமை பெற்றுள்ள ராஜபக்சவின் சொத்து மற்றும் வருமானம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசியின் நிர்ணய விலைகளை மீறி விற்பனை செய்வோருக்கு நடவடிக்கை



கொழும்பு, மே 4
அரிசிக்கான உச்சபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், அதை மீறி அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்வோருக்கு, 50 லட்சம் ரூபா அபராதமும் ஆறு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என நுகர்வோர் விவகார சபை அறிவித்துள்ளது.
1 கிலோ கிராம் நாட்டரிசி ரூ. 220, 1 கிலோ கிராம் சம்பா ரூ. 230, 1 கிலோ கிராம் கீரி சம்பா ரூ. 260 என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-இ)

# பொருண்மியத்தில் நலிவடைந்த குடும்பங்களுக்குக் கொடுப்பனவு

### அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, மே 4**
**வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு மே மாதம் தொடக்கம் ஜீலை மாதம் வரை விசேட கொடுப்பனவு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

நிதி அமைச்சர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் சமுர்த்தி, வயோதிப, சிறுநீரக மற்றும் வலுவிழந்தோர் கொடுப்பனவுகளைப் பெறும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
அத்தகைய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக காத்திருப்புப் பட்டியலிலுள்ள குடும்பங்களுக்குத் துரிதமாக உதவி வழங்க வேண்டிய தேவையை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது.
அதற்கமைவாக உலக வங்கிக் குழும நிதியின் கீழ், நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டமான குறிப்பீடற்ற துரித பதிலளிப்பு பிரிவின் மூலம், அதற்கான நிதி வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. (க-இ)

## மின்சார இணைப்பு வழங்கல் குறைப்பு

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, புதிய மின்சார இணைப்புகள் வழங்குவது குறைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (ய-இ)

## பிரதேச சபை உறுப்பினரின் வீடு உடைத்துத் திருட்டு


யாழ்ப்பாணம், மே 4
சண்டிலிப்பாய் பகுதியில் வசிக்கும் வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் கிருபாகரனின் வீடு உடைத்து பல பொருள்கள் கடந்த முதலாம் திகதி திருடப்பட்டுள்ளன.
பிரதேச சபை உறுப்பினர் குடும்பத்துடன் வெளியில் சென்ற நிலையில் வீடு உடைத்து எரிவாயு சிலிண்டர், கிரைண்டர், வங்கிக் கணக்குப் புத்தகம் மற்றும் ஏ.ரி.எம் அட்டை என்பன திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-27)

## பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினரை மணிவண்ணன் சந்தித்துப் பேச்சு!

பரிஸ், மே 4
பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பற்றிக் அனத்தோவுக்கும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணனுக்கும் இடையிலான சந்திப்பு பிரான்ஸ் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அண்மையில் நடைபெற்றது.
இதன்போது தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி, தமிழர்களின் தற்போதைய சமூக பொருளாதார நிலைமைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. சந்திப்பின் ஒரு பகுதியாக பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பற்றிக் அனத்தோவுக்கு, யாழ்ப்பாண மாநகர சபையின் சார்பில் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.
இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுடன் நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் பத்மநாதன் மயூரன், யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-14-20)

## நெல்லியடியில் பணம் திருட்டு

யாழ்ப்பாணம், மே 4
நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள கால்நடைத் தீவன விற்பனை நிலையத்தில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.
மே தினத்தன்று குறித்த கால்நடைத் தீவன விற்பனை நிலையம் மூடப்பட்டது. இதன்போதே விற்பனை நிலையத்தின் பின்பக்கக் கதவை உடைத்து பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-23)



பாரதிய ஜனதக் கட்சியின் முக்கியஸ்தரும் அந்தக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவருமான அண்ணாமலை, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரனை நல்லூரில் அமைந்துள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானும் இணைந்திருந்தார். (ம-14-20)



## வாள்வெட்டுக் குழுவுக்கு விளக்கமறியல் பிறப்பிப்பு

முல்லைத்தீவு, மே 4
வாள்வெட்டுக்குழுவில் கைதான ஐவருக்கு எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியல் பிறப்பிக்கப்பட்டது.
புதுக்குடியிருப்பில் ஒரு குழுவொன்று தங்களை வாள்வெட்டுக்குழு என்று அறிமுகப்படுத்தி மக்களை அச்சுறுத்தித் துண்டுப்பிரசுரம் வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் ஐவர் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் மற்றும் கைபேசிகள், உந்துருளிகள் என்பன மீட்கப்பட்டன. அத்துடன் அவர்களின் கைபேசிகளில் குடும்பப் பெண்களின் ஆபாச காணொலிகளும் காணப்பட்டுள்ளன. அத்துடன் வடக்கில் பிரபல வாள்வெட்டுக்குழுவுடன் தொடர்புடைய குற்றவாளியுடன், கைதுசெய்யப்பட்ட சிலர் ஒளிப்படங்கள் எடுத்துள்ளமையும் கண்டறியப்பட்டது. இதையடுத்தே சந்தேக நபர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சான்றுப்பொருள்களும் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. (ம-14-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மே 18 : காத்திருக்கும் அமிலச்சோதனை!

கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமாகி வரும் நிலையில், இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் தம்மை முழுமையாக இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை தென்னிலங்கையில் குறிப்பாக போராட்டக்களங்களில் சில நாள்களாகவே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக, இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் தம்மையும் இணைத்துக்கொள்ள வேண்டுமா? வேண்டாமா? என்ற விவாதங்கள் நம்மிடையே பேசுபொருளாகியுள்ளன.

''அரசின் வினைத்திறனற்ற நிர்வாகத்தால், தமிழர்களின் பொருளாதாரமும்தானே பாதிக்கப்பட்டிருக்கின்றது? தமிழர்களும்தானே பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளார்கள்? அப்படியாயின் இது சிங்களவர்களுக்கு மட்டுமல்லாது தமிழர்களுக்கும் உரிய பொதுவான பிரச்சினைதானே. ஆதலால் இந்தப் பிரச்சினைகளுக்கு எதிரான போராட்டங்களில் தமிழர்களும் கைகோர்க்க வேண்டும்தானே?'' என்ற கேள்விகளை எழுப்புகின்றவர்கள், ஒரு விடயத்தை தெட்டத்தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழர்களின் கோரிக்கைகளும் அவர்களின் போராட்டத் தளமும் வேறு. சிங்கள மக்களின் கோரிக்கைகளும் அவர்களின் போராட்டத் தளமும் வேறு. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தமிழர்களுக்குமானது தான். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், தமிழர்களுக்கு இருக்கும் பல்வேறுபட்ட, தீர்க்கப்படாத – தீர்க்கப்பட விரும்பாத – பிரச்சினைகளில் இந்தப் பொருளாதாரப் போரும் ஒன்றாக இருக்கின்றதே தவிர அதுமட்டும்தான் தமிழர் தாயகத்தில் உள்ள ஒரேயொரு பிரச்சினையல்ல. ஆனால், தென்னிலங்கை மக்களுக்கோ அவ்வாறல்ல.அவர்களுக்கு பொருளாதார நெருக்கடி மட்டுமே ஒரேயொரு பிரச்சினை.

கோத்தாபய அரசாங்கம் நாளைக்கே எரிவாயுவின் விலையைக் குறைத்தால், அரிசியின் விலையைக் குறைத்தால், எரிபொருள்களை சுமுகமாகக் கிடைக்கச் செய்தால், இதர பொருண்மிய நெருக்கடிகளையும் இல்லாதாக்கினால், காலிமுகத்திடல் போராட்டக்களம் காணாமலே போய்விடும். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் பட்சத்தில் சிங்கள மக்கள் தமிழர்களுக்கு நீதிகோரி, இறுதிப்போரில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இனப்படுகொலைகளுக்கு எதிராக களமிறங்கப் போவதில்லை. அதுதான் உண்மை. வரலாறு என்னும் பேராசான் சொல்லுகின்ற மகத்தான பாடமும் அதுவேதான்.


அதேநேரம், தென்னிலங்கையில் ராஜபக்சக்களின் இனவாதச் சிந்தாந்தத்துக்கு எதிரானதும் – 2009களில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகளுக்கு எதிரானதுமான போக்கு துளிர்த்திருக்கின்றது என்ற கருத்தையும் மறுப்பதற்கில்லை. அந்தக் கருத்துக்கள், அந்தச் சிந்தனைகள் இன்னும் தீவிரமாக தேசிய மயப்படவேண்டும் என்பதைத்தான் தமிழர்கள் தற்போது எதிர்பார்க்கின்றார்கள். புரையோடிப் போயுள்ள இனவாதத்தை அடியோடு தூக்கியெறிந்துவிட்டு இந்த நாட்டை கொஞ்சமாவது அதிலிருந்து மீட்டுவர வேண்டும் என்ற எண்ணவோட்டம் ஆத்மார்த்தமாக இருந்தால் கோத்தாபய அரசாங்கம் பதவிவிலக வேண்டும் என்ற சாரப்பட முன்வைக்கப்படும் கோரிக்கைகளுடன் 'தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு நீதி வழங்கப்படவேண்டும், இனப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்' என்ற கோரிக்கைகளையும் காலிமுகத்திடல் போராட்டக்களம் முன்னிறுத்தவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், சிவில் சமூக அமைப்புகள், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் என்பன முன்வைத்த 'முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலில் சிங்களவர்களும் இம்முறை இணையவேண்டும்' என்ற கோரிக்கை இங்கே அடிக்கோடு கட்டப்படவேண்டியது. ஈழத் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட மே 18ஆம் நாளை போர் வெற்றிநாள் என்று எக்காளமிட்டு கொண்டாடித்தீர்த்த மனங்கள், இம்முறை தாம் இதுகாலும் முன்னெடுத்த விழாக்கோலங்கள் இனப்படுகொலைகளின் அவலக்குரல் என்பதை நினைந்துருக எத்தனிக்குமானால் அதுதான் இந்தத் தீவுக்கான திருப்பம். அத்தகையதொரு மாற்றத்தைத்தான் தமிழர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அப்படி காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாளை உணர்வுபூர்வமாக நினைவேந்தி, அஞ்சலிப்பார்களானால் அவர்களிடையே உண்மையாகவே மனமாற்றம் ஏற்பட்டுள்ளது என்று தமிழர்கள் நம்பி, அவர்களோடு போராடக் கைகோர்க்கலாம். ஆகமொத்தத்தில் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கான அமிலச் சோதனை[illegible]ழர் தரப்பு உற்றுநோக்குகின்றது. கைகோர்ப்பதா[illegible] நிற்பதா? மே 18 தீர்மானிக்கும்.

### நாளொரு நல்வார்த்தை

"ஒரு பிழையை அழிப்பது ஒரு புதிய உண்மையை நிறுவுவதைப் போல சிறந்த சேவையாகும், சில சமயங்களில் அதைவிடவும் சிறந்தது" - சார்ள்ஸ் டார்வின்

கருத்தோவியம்: லுகன்



# புதிய அரசமைப்பு குறித்து ஆராய உபகுழு நியமனம்!

**கொழும்பு, மே 4**

**புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவால், முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து, பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இதன்போதே குறித்த உபகுழுவை அமைப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தினேஷ் குணவர்த்தன, டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் பத்திரண மற்றும் அலி சப்ரி ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

புதிய அரசமைப்பு வரைவைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் த சில்வா தலைமையில் சட்டத்துறை நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு 2020ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த நிபுணர்கள் குழுவின் ஆரம்ப அறிக்கை கடந்த 25ஆம் திகதி ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களை ஆராய்ந்து உகந்த பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைப்பதற்காக குறித்த உபகுழு அமைக்கப்பட்டுள்ளது.

(க-44)

# மத்திய வங்கியின் ஆண்டறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அனுமதி

கொழும்பு, மே 4

2021ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை நாணய சபையால், கடந்த 29ஆம் திகதி நிதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நாடாளுமன்ற அமர்வு இடம்பெறுமாயின், ஆண்டறிக்கை கிடைக்கப்பெற்று 14 நாள்களுக்குள் நிதி அமைச்சர், குறித்த ஆண்டறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவேண்டும்.

அதற்கமைய, 2021ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் அலி சப்ரியின், இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(க-44)

நாளை 05.05.2022 வியாழக்கிழமை சித்திரை 22

சுபநேரம் : 07.26 - 08.56
ராகுகாலம்: 01.26 - 05.56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்சன் நகரம் தனி நாடாகிறது

## ரஷ்யா புதுவியூகம் என்று அமெரிக்கா குற்றச்சாட்டு



**கீவ், மே 4**

**உக்ரைனின் கென்சன் நகரத்தை தனி நாடாக அறிவிப்பதற்கு ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.**

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து அந்த நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை அறிவித்து போர் தொடுத்தது ரஷ்யா. கடந்த 10 வாரங்களாக இடம்பெற்றுவரும் இந்தப் போரில் உக்ரைனில் பல நகரங்களைக் கைப்பற்றியுள்ளது ரஷ்யா. உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள நகரங்களை முன்னதாகக் கைப்பற்றிய ரஷ்யா அதை உக்ரைன் எதிர்ப்புப் போராளிகளிடம் கையளிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் உக்ரைனில் மேற்குப் பக்கமாக உள்ள கென்சன் நகரத்தைக் கைப்பற்றி அதைத் தனிநாடாக அறிவிக்க ரஷ்யா முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்று அமெரிக்கா தற்போது குற்றஞ்சாட்டியுள்ளது. இவ்வாறாக உக்ரைனின் எல்லைகளில் தனக்குச் சாதகமான தனி நாடுகளை ஏற்படுத்துவதன்மூலம் தனது பாதுகாப்பைப் பலப்படுத்த ரஷ்யா திட்டமிடுகின்றது என்றும் உக்ரைனைத் தனிமைப்படுத்த வியூகம் வகுக்கின்றது என்றும் சர்வதேச அரசியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (ம)



# லடாக் பகுதியில் மீண்டும் வீதிகள்

## *முண்டுகின்றது சீனா*

பீஜிங், மே 4

இந்தியா மற்றும் சீனா இடையிலான லடாக் எல்லையில் வீதிகளை அமைப்பதற்கு சீனா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

லடாக் பிராந்தியத்தில் இந்தியா - சீனாவை பிரிக்கும் பாங்காங் ஏரியில் சீனா ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றுவருகிறது. இதையடுத்து அந்தப் பகுதியில் இந்தியா இராணுவத்தைக் குவித்துள்ளது. சீனாவைப் போன்று இந்தியாவும் லடாக் எல்லையில் நவீன சாலைகளை அமைத்துள்ளது. இந்த நிலையில் லடாக் பிராந்தியத்துக்குள் மிக எளிதாக ஊடுருவும் வகையில் சீனா மீண்டும் புதிய சாலைகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இது இரு நாடுகளுக்கும் இடையில் மீண்டும் பதற்றநிலையை ஏற்படுத்தியுள்ளது. (ம)

# உக்ரைன் படைகளுக்கு கூடுதலான ஆயுதங்கள்

## *அமெரிக்காவும் விடுவதாயில்லை*



கீவ், மே 4

அமெரிக்காவால் உக்ரைனுக்கு வழங்கப்பட்ட ஒருதொகுதி இராணுவத் தளவாடங்கள் ரஷ்யப் படைகளால் அழிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் ஒரு தொகுதி அதிநவீன ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.

உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கு பிராந்தியங்களில் ரஷ்ய படைகளின் தாக்குதலை தடுக்கும் முயற்சியாக உக்ரைனுக்கு அதிக ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. உக்ரைனின் கிழக்குப் பகுதி நகரமான டொன்பாஸில், ரஷ்யப் படைகளின் ஊடுருவலைத் தடுக்க இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என்று வெள்ளைமாளிகை தெரிவித்துள்ளது. (ம)

# அமெரிக்க ஆயுதங்களை தகர்த்தது ரஷ்யப் படை!



கீவ், மே 4

உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய ஒருதொகுதி ஆயுதங்களை ரஷ்யப் படைகள் முழுவதுமாகத் தகர்த்து அழித்துள்ளன.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையில் ரஷ்யாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் பெருமளவான ஆயுதங்களை அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கி வருகின்றது. ரஷ்யாவுக்கு எதிராகத் தாக்குப்பிடித்து குறிப்பிடத்தக்களவு பின்னடைவை ரஷ்யாவுக்கு உக்ரைனால் வழங்க முடிந்தது என்றால் அதற்கு அமெரிக்காவின் ஆயுதங்களும் முக்கிய காரணம். இந்த நிலையிலேயே உக்ரைனுக்கு அமெரிக்காவால் மிகச் சமீபத்தில் வழங்கப்பட்ட ஒருதொகுதி ஆயுதங்களை தகர்த்து அழித்துவிட்டோம் என்று ரஷ்யப் படைகள் அறிவித்துள்ளன.

விமான ஓடுதளம் ஒன்றுடன் இணைந்த முறையில் அந்த இராணுவத் தளவாடங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன என்றும் ஓடுதளத்தையும் இராணுவத் தளவாடங்களையும் தமது துல்லியத் தாக்குதலில் அழித்துள்ளோம் என்று ரஷ்யப் படைகள் மேலும் தெரிவித்துள்ளன. (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** அந்நிய நபர்களின் வழியே உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்களுடைய முயற்சிகளால் இலாபமடைவீர்கள். உங்களுக்கு ஏற்படும் செலவால் மனச்சங்கடம் உண்டாகும்.

**இடபம்:** சுபச்செலவு செய்வதால் குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. நீங்கள் எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். கலகலப்பு கூடும் நாள்.

**மிதுனம்:** அரசு வழியில் நன்மைகள் வந்து சேரும். மகிழ்ச்சியான நாள். உங்கள் கவனக்குறைவால் சில சங்கடங்கள் உண்டாகும். தொழில் மீதான சிந்தனை மேலோங்கும்.

**கடகம்:** தரும சிந்தனை மேலோங்கும். கோவிலுக்குச் செல்வீர்கள். இன்று நீங்கள் நினைத்தது நிறைவேறும். மகிழ்ச்சியானநாள். இருக்கும் இடத்தை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள்.

**சிம்மம்:** உங்கள் செயல்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும். அந்நியர்கள் வழியே ஆதாயம் காண்பீர்கள். நிதிநிலை கூடும். உடல் நிலைக்காக மருத்துவரை சந்திக்க நேரும்.

**கன்னி:** உங்களுடைய வார்த்தைகளால் சில சங்கடங்களைச் சந்திப்பீர்கள். குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் வந்து சேரும். எதிர்பார்த்த செயலில் தடை உண்டாகி பின்னர் சரியாகும்.

**துலாம்:** மனதில் தேவையற்ற குழப்பங்கள் மேலோங்கும். தொழில், வேலை காரணமாக வெளியூர் பயணம் ஏற்படும். உங்களுடைய வேலை சில இழுபறிக்குப்பின் முடியும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் இன்று உங்களுக்கு வந்து சேரும். உழைப்புக்கு ஏற்ற ஆதாயம் உண்டாகும். நிம்மதியான நாள். தைரியத்துடன் செயற்பட்டு நினைத்ததைச் சாதிப்பீர்கள்.

**தனுசு:** நட்புகளால் சங்கடம் உண்டாகும் என்பதால் எச்சரிக்கைத் தேவை. உங்கள் கவனக்குறைவால் சில நெருக்கடி தோன்றும். யோசிக்காமல் பேசும் வார்த்தைகளால் உறவுகள் பகையாகும்.

**மகரம்:** உங்கள் செயற்பாடுகளில் இன்று கஷ்டத்தை சந்திப்பீர்கள். எதிரிகளின் தொல்லையால் மனதில் கலக்கம் உண்டாகும். குடும்பத்தில் ஒருவருக்கு குழப்பம் நீங்கும் நிம்மதி காணும் நாள்.

**கும்பம்:** துணிச்சலாகச் செயற்பட்டு நினைத்ததைச் சாதிப்பீர்கள். எதிர்பாராத பண வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவுகளிடம் இருந்த மனவருத்தம் நீங்கும்.

**மீனம்:** நீங்கள் மனதில் நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். வருமானத்தில் இருந்து வந்த தடை நீங்கும். உங்கள் செயல்களால் குடும்பத்துக்குள் குழப்பம் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் தினத்தை முன்னிட்டு நோன்புப் பெருநாள் தொழுகை





யாழ்ப்பாணம், மே 4
யாழ். மர்யம் ஜும்ஆ பள்ளி வாசலின் ஏற்பாட்டில் ரமழான் தினத்தை முன்னிட்டுநோன்புப் பெருநாள் தொழுகை யாழ். ஒஸ் மானியக் கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் நேற்று இடம்பெற் றது.
'நபி வழியில் நம் தொழுகை' எனும் கருப்பொருளில் நோன்புப் பெருநாள் தொழுகை மற்றும் பெருநாள் குத்பா பிரசங்கம் என பன மௌலவி எம்.ஏ.பைசரால் நிகழ்த்தப்பட்டன. தொழுகையில் யாழ். வாழ் முஸ்லிம்கள், இளை யோர், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
(ம-14,27)



## சத்துணவு வழங்கும் திட்டம் பிரதேசசபையில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 4
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையால் முதியோ ருக்கு சத்துணவு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப் பட்டது.
அதற்கமைய வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைக் குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து 2 ஆயிரத்து 300க்கும் மேற்பட்ட முதியவர்களுக்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சத்துணவுகள் வழங் கப்பட்டன.
குறித்த திட்டத்துக்கு அடுத்த ஆண்டுகளில் இரண்டு மடங்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் அ.ஜெபநே சன் தெரிவித்தார்.
(ம-14,125)



### 43 வருடங்களின் பின்னர்

## தேசியப் பூப்பந்தாட்டத்தில் வடக்கு வீரருக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், மே 4
வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 40 வய துக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவில் வடமாகாணம் சார்பில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியை சேர்ந்த சற்குணம் காண்டீபன் தேசிய மட்டத் தில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். அவருக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
யாழ். மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய பிரதான மண் டபத்தில் இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் நயணப்பிரிய, யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் விஜிதரன், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய செயலாளர் கோவிந்தன், யாழ். மாவட்ட பூப்பந்தாட்டக் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
(ம-14,125)



சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத் தால் பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. அதற் கமைய யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர், ஊர்கா வற்றுறை, வேலணை, உடுவில், தெல்லிப்பழை, கரவெட்டி, பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு முதற்கட்டமாக உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங் கப்பட்டன.
(ம-14,27)



யாழ். மாவட்ட பாதுகாப்பு படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை பிரதேசத்தை சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் பாதணிகள் வழங்கப்பட் டன.
(ய-9)

மத்திய கலாசார நிதியத் தின் புதிய இணையத்த ளம் மற்றும் யூரியூப் ஆகி யன பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட் டன.
(ம-14,20)






ஸ்ரீ சச்சிதானந்தா அறக்கொடை நிலையத்தின் ஏற்பாட்டில் கைதடி, நாவற்குழிப் பிரதேசத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரம நூல் நிலைய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. சச்சிதானந்த அறக்கொடை நிலைய கல்விப்பகுதிப் பொறுப்பாளர் சிவலோஜினி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் தென்மராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரி நா.சத்தியநாதன், நாவற்குழி மகா வித்தியாலய முன்னாள் அதிபர் சி.பவளகுமாரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.
(ம-14,159)



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில், தரம் ஒன்று மாண வர்களை இணைக்கும் கால்கோள் விழா அண்மையில் வித்தியாலய மண்ட பத்தில் இடம்பெற்றது.
(ம-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிபொருள் விநியோகத்தில் மக்களை வதைக்காதீர்கள்!

## தொழிற்சங்கவாதி ஆனந்த பாலித வலியுறுத்து

**கொழும்பு, மே 4**

**எரிபொருள் விநியோகத்தை நெருக்கடிக்குள்ளாக்கி பொதுமக்களை மேலும் துன்புறுத்த வேண்டாம். அத்துடன், தனியார் எரிபொருள் பவுஸர் உரிமையாளர்கள் முன்வைத்துள்ள கோரிக்கையையும் அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என்று தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் இருப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். ஏப்ரல் மாதம் 19ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கைக்குள் பெற்றோல் இறக்குமதியாகவில்லை. 30 நாள்கள் தாமதக் கட்டணத்தைச் செலுத்திய தன் பின்னர் தற்போதுதான் டீசல் இறக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் உள்ள 95 வீதமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் விநியோகப் பற்றாக்குறையை எதிர்கொள்வதால், பொதுமக்களுக்கே அது சுமையாகவுள்ளது. வரிசையில் நிறுத்தி பொதுமக்களை சிரமத்துக்கு ஆளாக்க வேண்டாம். உடனடியாக பெற்றோல் இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (க-இ)

# டொலர் பற்றாக்குறையால் அதிகரித்த தாமதக் கட்டணம்

கொழும்பு, ஏப். 4

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தகவலின்படி, பெற்றோல் மற்றும் கச்சா எண்ணெய் ஏற்றிவந்த கப்பல்களுக்கு டொலர் பற்றாக்குறையால் அதிகளவான காலதாமதக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

டீசல் ஏற்றி வந்த கப்பலும், பெற்றோல் மற்றும் டீசலை ஏற்றி வந்த கப்பலும் மார்ச் 28 ஆம், 29ஆம் திகதிகளில் இலங்கையை வந்தடைந்தன. அவற்றை இறக்க முடியாத காரணத்தால் நேற்று முன்தினம் நிலைவரப்படி மேலும் 422 மில்லியன் ரூபா தாமதக் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருந்தது.

எனினும், டீசலை இறக்குவதற்குத் தேவையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு, இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 70 ஆயிரம் மெற்றிக் தொன் கச்சா எண்ணெயை ஏற்றி வந்த கப்பலுக்குச் செலுத்த வேண்டிய 70 மில்லியன் டொலரைச் செலுத்த முடியாததால், அந்தக் கப்பலை விடுவிக்கும் பணி முடங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# ஒயில் விலைகளும் சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, மே 4

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக வாகனங்களுக்கு பயன்படுத்தப்படும் இயந்திர ஒயில்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அநேகமான ஒயில்கள் 20 முதல் 50 சதவீதம் வரை விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. சில ஒயில்களின் விலை 100 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# எரிபொருள் விலைகளை திருத்த தீர்மானமில்லை

## அமைச்சர் விஜேசேகர தெரிவிப்பு

கொழும்பு, மே 4

எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சரான காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. ஆகியவற்றின் எரிபொருள்களின் விலையை இணையான விலைக்குக் கொண்டு வருவது குறித்து ஆலோசித்து வருகின்றோம்.

இது தொடர்பான பிரேரணை அமைச்சரவையில் கையளிக்கப்படும். ஒரு வெளிப்படையான எரிபொருள் விலைத்திருத்தம் அறிமுகப்படுத்தப்படும். மேலும் இரண்டு வாரங்கள் வரை விலைத்திருத்தம் குறித்து விவாதிக்க எதிர்பார்க்கவில்லை - என்றார். (க-இ)



# வீதி அபிவிருத்திகள் தொடர்பில் நெடுஞ்சாலை அமைச்சு ஆராய்வு

கொழும்பு, மே 4

நெடுஞ்சாலைகள் அமைச்சால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய வீதி மற்றும் பாலங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில், நெடுஞ்சாலைகள் அமைச்சர் கனக ஹேரத் தலைமையில் மீளாய்வு செய்யப்பட்டது.

மொனராகலை, மட்டக்களப்பு மற்றும் கேகாலை ஆகிய மூன்று மாவட்டங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீதி மற்றும் பாலத்திட்டங்கள் மற்றும் உத்தேச திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் கருத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதித்திட்டம், ஒருங்கிணைந்த கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம், ரன்மாவத் திட்டம், மகநெகுமவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வீதி அபிவிருத்தித் திட்டங்கள், கிராமத்துடன் உரையாடல் போன்ற வேலைத்திட்டங்களின் மூலம் வீதி மற்றும் பால அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வகையில் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர், அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (க-இ)

### பொருள்களின் விலை அதிகரிப்பால்

# கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தகாரர்கள் முன்வரவில்லை!

## உள்ளூராட்சி சபைகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 4

பொருள்களின் விலை அதிகரிப்பால் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தகாரர்கள் எவரும் முன்வரவில்லை என்று உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கட்டுமானப் பொருள்களின் விலை அதிகரிப்பால் உள்ளூராட்சி சபைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் உட்கட்டமைப்புப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

தற்போது உள்ளூராட்சி சபைகளால் கோரப்படும் உட்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வருவதில்லை. விலை அதிகரிப்பாலேயே அவற்றை மேற்கொள்ள ஒப்பந்தக்காரர்கள் பின்னடித்து வருகின்றனர்.

மேலும் உள்ளூராட்சி சபைகளால் கோரப்படும் மதிப்பீட்டின் பிரகாரம் பணிகளை மேற்கொள்ள முடியாததால் ஒப்பந்தப் பணிகளைப் பொறுப்பேற்க அவர்கள் முன்வரவில்லை.

பொருள்களின் விலைகள் குறைவடைந்து அல்லது மதிப்பீட்டுத் தொகை அதிகரிக்கப்படும் வரை உட்கட்டுமானப் பணிகளை பொறுப்பேற்க அவர்கள் தயாரில்லை - என்றனர். (ம-14-9)

# சீனாவிடமிருந்து 300 மில். யுவான்!

கொழும்பு, மே 4

இலங்கைக்கு 300 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்க சீனா தீர்மானித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும், சீனப் பிரதமர் லீ கெகியாங்க்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் மூலம் இந்த நிதியுதவி கிடைத்துள்ளது.

இந்த நிதியின் மூலம் இலங்கைக்குத் தேவையான அத்தியாவசியமான மருந்துகள், உணவுப் பொருள்கள், எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் பெற்றுக் கொள்ளப்படும் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (க-இ)

# பிக்குகள் சம்மேளனம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 4

அரசாங்கத்துக்கு எதிராக பல்கலைக்கழக பிக்குகள் சம்மேளனம் கொழும்பில் நேற்று எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டது.

அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். நாட்டை நெருக்கடிக்குள் தள்ளிய அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (க-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்க உறுப்பினர்களின் நினைவுப்பகிர்தல் நிகழ்வு

கொழும்பு, மே 4

கொழும்புத் தமிழ்ச்சங்க உறுப்பினர்களின் நினைவுப்பகிர்தல் நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமரர்களான டபிள்யு.எஸ்.செந்தில்நாதன், எஸ்.தியாகராசா, கா.வைத்தீஸ்வரன், க.அரசரத்தினம் ஆகியோருக்கே நினைவுப்பகிர்தல் இடம்பெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் அஞ்சலி உரையை நிர்வாகக்குழு உறுப்பினர் ஜி.இராஜகுலேந்திரா, இசை ஆசிரிய ஆலோசகர் யசோதரா பாலேஸ்வரன், நுண்கலைக்குழுச் செயலாளர் தெ.மதுசூதனன் உட்படப் பலர் ஆற்றவுள்ளனர். (ம-14)



# பொன்சேகாவையும் ஹரீனையும் சமாதானமாக்கிய இடியப்பம்

கொழும்பு, மே 4

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் சரத் பொன்சேகா ஆகிய இருவருக்கும் இடையில், ஐக்கிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டத்தில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

குறித்த கூட்டத்தில் சரத் பொன்சேகா ஹரீனை அழைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உரையாற்றுவதற்கு முன்னர், தனக்கு உரையாற்ற வாய்ப்பு வழங்குமாறு கோரியுள்ளார். அவ்வாறு செய்ய முடியாது. நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே உரையாற்ற முடியும் என்று ஹரீன் பதிலளித்துள்ளார். அதனால் அவ்விடத்தைவிட்டு நகர முயன்ற சரத் பொன்சேகாவை ஹரீன் தடுத்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அருகிலிருந்த ரவூப் ஹக்கீம் மற்றும் மனுச நாணயக்கார ஆகியோர் இருவரையும் சமாதானப்படுத்தியுள்ளனர். இறுதியில் கூட்டம் நிறைவடைந்ததும் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இருவரையும் சமாதானப்படுத்தியுள்ளார். இறுதியில் பொன்சேகாவின் மனைவி சமைத்தனுப்பிய இடியப்பத்தை பொன்சேகாவும் ஹரீனும் பகிர்ந்துண்டு சமாதானமாகினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

பொருளாதார நெருக்கடி

# பாடசாலைகளுக்கு பசியுடன் சமுகமளிக்கும் மாணவர்கள்

கொழும்பு, மே 4

மாணவர்கள் பாடசாலைக்கு பசியுடன் வருவது அதிகரித்துள்ளது என்று அதிபர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.



இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் சுஜீவ விமலரத்ன தெரிவித்ததாவது:-

நாடு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதனால் பிள்ளைகளுக்கு உணவளிப்பதற்கே பெற்றோர் பெரிதும் திண்டாடி வருகின்றனர். இதன் காரணமாக பாடசாலைகளுக்குப் பசியுடன் வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பாடசாலைகளில் இடம்பெறும் காலை நேரக் கூட்டங்கள் மற்றும் வழிபாடுகள் மற்றும் ஆராதனைகளில் மாணவர்கள் உணவின்றி மயக்கமடையும் அசம்பாவிதங்கள் அதிகரித்துள்ளன - என்றார். (ம-ய)

# சாவகச்சேரி மருத்துவமனை சிற்றுண்டி நிலையம் திறப்பு

சாவகச்சேரி, மே 4

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சிற்றுண்டி நிலையம் மீண்டும் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

சிற்றுண்டி நிலையம் மூடப்பட்டிருந்ததால் விடுதிகளில் தங்கியிருந்த நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர். அத்துடன் சிற்றுண்டி நிலையம் இயங்காததால் உணவு பெறுவதில் ஏற்பட்ட சிரமத்தால் தூர இடங்களிலிருந்து வந்து சிகிச்சை பெற்றிருந்த சிலர் நோய் குணமடையாவிட்டாலும் இடைநடுவில் வீடு செல்லும் அவலநிலையும் காணப் பட்டது.

இந்த நிலையிலேயே மருத்துவமனை நிர்வாகமும் நோயாளர் அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து மேற்கொண்ட முயற்சியால் சிற்றுண்டி நிலையம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. (ம-14,9)

# 40 இலட்சம் ரூபா பெறுமதியான கார் கொள்ளை; ஒருவர் கைது

கொழும்பு, மே 4



பழுதுபார்ப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த 40 லட்சம் ரூபா பெறுமதியுடைய காரொன்றைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிரிஹானை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர் மாளிகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவரால் திருடப்பட்ட கார் மாளிகாவத்தைப் பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் நுகேகொடை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (க-இ)

# பழம்பெரும் நடிகர் வில்சன் காலமானார்

கொழும்பு,மே 4

பழம்பெரும் நடிகர் வில்சன் கருணாரத்ன 79 ஆவது வயதில் காலமானார்.

வில்சன் கரு என்று பிரபலமாக அறியப்படும் இவர், சிங்கள சினிமாவில் ஒரு மூத்த தற்காப்புக் கலைஞராவார். 1974ஆம் ஆண்டு வெளியான ஹதவத் நெத்தோ திரைப்படத்தில் நடிகராக அறிமுகமான இவர் 250 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். (க-இ)

# குழிக்குள் சிக்கிய இருவர் உயிரிழப்பு

## மீட்கச் சென்றோரும் மயக்கம்

கொழும்பு, மே 4



வீட்டின் கழிவு நீரை வெளியேற்றுவதற்காக வெட்டப்பட்ட குழிக்குள் சிக்கிய இருவர் உயிரிழந்தனர்.

அவர்களை மீட்கச் சென்றோரும் மயக்கமடைந்தனர். இந்தச் சம்பவம் மல்வான, யட்டியானப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

தொழிலாளியொருவர் குழிக்குள் இறங்கியபோது மயங்கி விழுந்துள்ளார். அவரை மீட்பதற்காக குழியில் இறங்கிய மற்றுமொருவரும் மயங்கி விழுந்துள்ளார். பின்னர், வீட்டின் உரிமையாளரும் அவர்களை மீட்க குழிக்குள் இறங்கியுள்ளார். அவரும் மயங்கி விழுந்தார். குழியில் இருந்தவர்களை மீட்பதற்காக மேலும் இருவர் குழிக்குள் இறங்கியுள்ளனர். அவர்களும் மயக்கமடைந்துள்ளனர்.

மயக்கமடைந்தவர்களை மீட்க சுவாசக் கருவியுடன் குழிக்குள் இறங்கிய மற்றுமொரு நபர் அவர்களை மீட்டுள்ளார். மயக்கமடைந்தவர்கள் பின்னர் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் வீட்டின் உரிமையாளரும், முதலில் குழியில் இறங்கிய தொழிலாளியும் உயிரிழந்துள்ளனர்.

ஆபத்தான நிலையில் இருந்த மேலும் இருவர் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். பியகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# ஹரீனுக்கு எதிராக சஜித்திடம் முறைப்பாடு

கொழும்பு,மே 4

மே தினக் கூட்டத்தில் தன்னுடன் மோதலில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு எதிராக, நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பொதுமக்கள் முன்னிலையில் என்ன பேச வேண்டும், எதைச் சொல்லக்கூடாது என்பதை ஹரீன் தெரிந்து கொள்ளவேண்டும். மே தினப் பேரணியில் தயாரிக்கப்பட்ட பேச்சாளர் பட்டியல் தொடர்பாக அவருடன்- வாக்குவாதம் ஏற்பட்டது. கட்சியிலுள்ள சில உறுப்பினர்களின் பிம்பத்தை அதிகரிக்க பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பின்வரிசை எம்.பிக்கள் சிலர் பேரணியிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். நானும் கண்ணியமான முறையில் எதிர்ப்புத் தெரிவித்த போதும், ஹரீன் தவறாக நடந்து கொண்டார் என்று பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனினும் பேச்சாளர் பட்டியல் கட்சியில் குறிப்பிட்ட நபர்களின் நன்மதிப்பை உயர்த்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது என்று ஹரீன் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளியின் ஓட்டோ யாழ்ப்பாணம் நகரில் திருட்டு!

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக் குப் பின்புறம் உள்ள விக்டோரியா வீதியில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று திருடப்பட்டுள்ளது. மாதாந்தச் சிகிச்சைக்கு வந்த மாற்றுத் திறனாளி ஒருவரின் முச்சக் கர வண்டியே திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள் ளது.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட ஒருவர் தனது முச்சக்கர வண்டியில் மாதாந்தச் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வந்துள்ளார். விக்டோ ரியா வீதியில் முச்சக்கர வண்டியை நிறுத் திவிட்டு, மருத்துவமனைக்குச் சென்ற அவர் திரும்பி வந்தபோது, முச் சக்கர வண்டி திருடப்பட்டி ருந்தமையை அவதானித் தார்.

இது தொடர்பாக யாழ்ப்பா ணம் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. அதேவேளை, யாழ்ப்பாணம் நகரப் பகு தியில் அண்மைய நாள்க ளாக வாகனங்கள் திருடப் படும் சம்பவங்கள் அதிக ரித்துள்ளன என்று பொது மக்கள் கூறுகின்றனர். (எ-23)




## குடியகல்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவித்தல்

கொழும்பு, மே 4

அத்தியாவசியமல்லாத சேவை களுக்காக இன்று அலுவல கத்துக்கு வருவதை தவிர்த் துக்கொள்ள வேண்டும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொதுமக்களி டம் வேண்டுகோள் விடுத்துள் ளது.

கணினி அமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளதை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. இதனால் ஒருநாள் சேவைகளிலும் தாமதம் ஏற்ப டலாம் என அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களிடையே அதிருப்தி

கொழும்பு, மே 4

நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கயந்த கருணாதிலக்க, ஹெக்டர் அப்புஹாமி, சமிந்த விஜேசிறி, ஹேஷா விதானகே, ரோஹினி கவிரத்ன, காவிந்த ஜயவர்தன உள் ளிட்ட தரப்பினர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மே தினக் கூட்டத்தில் இடம்பெற்றன என்று கூறப்படும் முறையற்ற செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அவர்கள் நேற்று நடந்த கூட்டத்தில் பங்கேற்காதிருக்க தீர்மானித்துள்ளனர். மே தினப் பேரணியின்போது, சில நபர்களின் செயற்பாடுகள் தொடர்பாக திரிபு படுத்துவதற்கு முயற்சிக்கப்பட்டது என்று அவர்கள் குற்றம்சுமத்தியுள் ளனர். (எ-இ)



## பிரதமர் இன்று விசேட உரை

கொழும்பு, மே 4

பிரதமர் மஹிந்த ராஜபக்ச இன்று நாடாளுமன்றத்தில் விசேட உரை யொன்றை வழங்கவுள்ளார் என்று தெரியவருகின்றது.

பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ச விலக வேண்டும் என்ற கோரிக்கை கள் வலுத்துள்ள நிலையில் அது தொடர்பான தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படு கின்றது. (எ-இ)

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2022**

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் **04.06.2022** அன்று முற்பகல் **10.00** மணியளவில் நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை **05.09** இற்கமைய **31.01.2022** இற்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே இக்கூட்டத்திற் கலந்துகொள்ள உரித்துடையவராவர். பொதுக்கூட்டத்திற் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 14.05.2022 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(ct. 35928) (2/6)

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

**லோ.துஷிகரன்**
**செயலாளர்.**

**முதலாம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு**

கடந்த 17.04.2021 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் ஐயாத்துரை மருதநாயகம்**

அவர்களின் ஓராண்டு நினைவு நாள் நாளை (05.05.2022) வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள் ளதால் அத்தருணம் தாங் களும் வருகை தந்து



அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**எண் 26, என்[illegible]**
**உருத்திரபுரம்.**

**குடும்பத்தினர்**

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள பல்பொருள் வர்த்தக நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

(CS 19608) (2/3)

தொடர்பு : **0771165752**

**மணமகள் தேவை**

1987 மக நட்சத்திரம் சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: **077 871 2347**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**கதிரவேலு ரதி**

தோற்றம்
17.06.1961

மறைவு
15.04.2021

ஆண்டு ஒன்று ஓடி
மறைந்தது
ஆறவில்லை அம்மா
எம்மனம்
நினைவில் தினமும்
வருகின்றாய்
நிஜமாய் ஒருநாள்
வருவாயா....?

பெருங்குளம் வீதி,
மடத்தடி, சாவகச்சேரி.

(CS 41471) (3/6)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்**

பிறப்பு
20 . 01 . 1938



இறப்பு
29 . 04 . 2022

**திரு. வேல்முருகு ஆறுமுகம்**
(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

யாழ். புலோலி ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும், தும்பளையை வதிவிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேல்முருகு அவர்கள் 29-04-2022 வெள்ளிக்கிழமை அன்று கனடா Torontoவில் இயற்கை எய்தினார். அன்னார், காலஞ்சென்ற ஆறுமுகம், விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாநாயகம், சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சகுந்தலா அவர்களின் அன்புக் கணவரும்,மாலதி, மாதவன், காலஞ்சென்ற முகுந்தன், வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரநாத், ரோகினி ஆகியோரின் மாமனாரும், சிவகாமசுந்தரி தியாகராசா (ஜேர்மனி), குமாரசாமி (நியூசிலாந்து), காலஞ்சென்ற உமையாம்பிகை புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சபாரவீந்திரன், சபாரத்தினம், சத்தியசீலன், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,அஜந்தி சயந்தன், மிஷாந்தினி, கௌசிக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதி நிகழ்வு 03-05-22 அன்று மாலை ஆறு மணிமுதல் மாலை ஒன்பது மணிவரையும் மறுநாள் 04-05-2022 காலை 7.30 - 8.30 வரையும் Chapel Ridge funeral home, 8911Woodbine Avenue, Markham Ontario வில் பூவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பின்னர் கிரிகைகளும், தொடர்ந்து 10.30 மணியளவில் Highland Hills Crematorium (12492 Woodbine Ave, Gormley, Ontario)ல் தகனமும் இடம்பெறும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தொடர்புகளுக்கு

மாலதி – மகள்
Mobile : +14162650832 / Phone : +16478925411

வாசுகி – மகள்
Mobile : +61452211894

மாதவன் – மகன்
Mobile : +447916271468

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 08 . 1944



இறப்பு 03 . 05 . 2022

## கந்தசாமி தம்பு (தம்பிராசா)

**(இளைப்பாறிய பிரதம தபாலதிபர், யாழ்ப்பாணம், நியூகமல் முன்னாள் காசாளர்)**

கற்குழி வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் இல.24, கச்சேரி கிழக்கு ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தம்பு நேற்று (03.05.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு கந்தசாமி முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மாணிக்கம் தம்பதியரின் மருமகனும், தவலச்சுமியின் கணவரும், கெங்காதரன், சியாமளா, பாஸ்கரன் ஆகியோரின் தந்தையும், சாந்தினி, சற்குமார், விஜயா ஆகியோரின் மாமனாரும், கௌசல்யா, லோகிதா ஆகியோரின் பேரனும், பிரகவியின் பூட்டனும், கமலாம்பிகை, காலஞ்சென்ற திருநாவுக்கரசு (முன்னாள் பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர், தபால் திணைக்களம்), சிவராசா (இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.24,**
**கச்சேரி கிழக்கு ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 729 1980**

(CS 19608) 1/6


# காணவில்லை



சுன்னாகத்தைச் சேர்ந்த
**நேசரத்தினம் ருநேஷ்கா**
என்ப வரை கடந்த 26.03.2022 முதல் காணவில்லை. இவரை பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**077 245 7695**
**074 228 9504**
**076 246 5304**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பு வாமதேவன்

**தோற்றம்**
**17.09.1951**

**மறைவு**
**26.04.2020**

**திதி : சதுர்த்தி**

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள்
- நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.


**112, ஜின்னா லேன்,**
**மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS 19594) (3/6)

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## பிரபாகரன் பிரமோகன் (உரிமையாளர் - பிரபா அரைக்கும் ஆலை)



வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பிரபாகரன் பிரமோகன் அவர்கள் கடந்த (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான பிரபாகரன் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், கார்த்திகா (ஆசிரியர் - மு/நட்டாங்கண்டல் GTMS) அவர்களின் அன்புக் கணவரும், யதுசரன் (மாணவன் - யாழ். இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும், பிரதீபன் (கனடா), பிறேமளா (கனடா), பிரகாந்தன், சாயிபதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரவீந்திரன் தயாநிதி தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஷாந்தினி (கனடா), கணேசராசா (கனடா), சுகந்தி, டர்சிகா, கேசிகா, சரவணபவன், யனுஷா ஆகியோரின் மைத்துனரும் சியாந்தன், பபுஜன், மதுஷனா, உதயராகவன் ஆகியோரின் சகலனும், பிரசாயினி, பிரதிகா, பிரதீப், பிரஷான் (கனடா) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், பிரவீணா, ஹர்ணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின், அனாமிகா, ஷகானா, ஷாத்விகா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2022) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கொடிகாமத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக சிற்பனை வீதி, வேலணையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் வைக்கப்பட்டு, தகனக்கிரியைகள் பி.ப 1.00 மணியளவில் வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 460 1297**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 19607) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 07 . 1964



மறைவு
01 . 05 . 2022

## திருமதி மல்லிகாதேவி ஞானேந்திரன்

(ஆசிரியர். யா/ மயிலிட்டி வடக்கு, கலைமகள் மகா வித்தியாலயம்)

கொல்லங்கலட்டி, களுவாக்கட்டடையை பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி ஞானேந்திரன் கடந்த (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.சிவபாதம் ஞானேந்திரனின் அன்பு மனைவியும், கஜவாணி (யாழ். மருத்துவ பீடம், 3 ஆம் வருடம்), கஜர்னிகா (உயர்தரம் யாழ். இந்து மகளிர் கல்லூரி) அகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான களுவாக்கட்டை சின்னத்தம்பி - சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குணலிங்கம், லீலாதேவி, கமலாதேவி (கனடா), புஷ்பராணி, காலஞ்சென்ற சொக்கலிங்கம் (பிரான்ஸ்), வசந்தாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாதம், பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஜெயச்சந்திரன், ரவீந்திரன் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், ராஜ்குமார், இராஜரங்கன், பிறேமா, தயாளன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (05.05.2022) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 723 2326

தகவல் :
குடும்பத்தினர்

(CS 44482) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
10 . 02 . 1947



இறப்பு
15 . 04 . 2021

## அமரர் சுப்பையா செல்வராஜா

(ஓய்வு நிலை உத்தியோகத்தர் நீர்ப்பாசனத்திணைக்களம்– கிளிநொச்சி)

திதி : 04.05.2022

அப்பா!
ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை
கோடி உறவுகள் எமக்கிருந்தாலும் எங்களின்
உயிரின் உறவு நீங்களே
அப்பா! உங்கள் உயிர்ப்பூவை உதிரவிடாமல் தாங்கினோமே
எங்களை வாடவைத்து ஓசையின்றி சென்றதேனோ அப்பா
உங்களின் ஓராண்டு நினைவு நாளில்
உங்களின் உதிரங்கள் தங்களின் உயிர்பூவை
ஊதி எறிந்த உன்னதங்கள்

சிறி / ரகு ஆகியோரையும் நினைவு கூருகிறோம்.

மகள்- மதிவண்ணன் சியாமளா
(ஆசிரியர் கல்லாறு தமிழ் வித்தியாலயம்)
மருமகன் - மதிவண்ணன் (செழியன்)
(பசுமை வாணிபம் - யாழ்ப்பாணம்)

077 804 6539
077 5915803 (பாபு)

(CS 0044473) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 02 . 1946



மறைவு
03 . 05 . 2022

## திருமதி துரைராசா பூமணி

வைரவர் கோவிலடி, பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா பூமணி நேற்று (03.05.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி குணசீலன் சைலா, து.பிரேமதாஸ் (சயந்தன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணசீலன், தர்சனா, ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜீபன், ரஜீபா, நதுசனன், கெஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திருமதி வேலுப்பிள்ளை இராசமணி அவர்களின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சின்னராசா, மகேஸ்வரி மற்றும் பூரணம், சிவராசா பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தீர்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை வீதி, அச்சுவேலி.
077 226 9221

தகவல் :
மகன் சயந்தன்

(CS 44486) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 01 . 1938



மறைவு
03 . 05 . 2022

## திருமதி சிவராஜரட்ணம் (இரத்தினக்கா)

கிளானையைப் பிறப்பிடமாகவும் கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராஜரட்ணம் (இரத்தினக்கா) நேற்று (03.05.2022) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாலாமணி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகளும், தம்பித்துரையின் அன்பு மனைவியும், சிறீறஞ்சினி, காலஞ்சென்ற பத்மநாதன், சாந்தினி, நந்தினி, மாலினி, சிதம்பரநாதன், றதீஸ்கரன், விமலினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கீரிமலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கம் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவிட்டபுரம் வீதி,
கீரிமலை.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 44486) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்வாதிகளின்...

ராஜபக்ச சகோதரர்களில் ஒருவரான பஸில் ராஜபக்சவின் சொத்துக்கள் தொடர்பான பல விடயங்கள் இந்த ஊடக சந்திப்பில் வெளியிடப்பட்டன.

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவின் பெரும்பாலான சொத்துக்கள் திருக்குமரன் நடேசனின் பெயரில் பதுக்கப்பட்டுள்ளன. மல்வானை காணி விவகாரத்தில் கூட மிகப்பெரிய ஊழல்கள் நடந்துள்ளன என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

எயார் பஸ்கள் கொள்வனவின்போதும் பெரும் ஊழல் நடந்துள்ளது என்பதை வெளிப்படுத்தி அநுரகுமாரதிஸாநாயக்க, ராஜபக்ச சகோதரர்களில் ஒருவரான சமல் ராஜபக்சவும் அதில் தொடர்புபட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

எயார் பஸ்களை கொள்வனவு செய்யுமாறு பிரான்ஸின் எயார் பஸ் நிறுவனம் அழுத்தம் பிரயோகித்துள்ளது. அது தொடர்பாகச் சர்வதேச மட்டத்தில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக பிரிட்டன் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது என்று அநுரகுமார குறிப்பிட்டார்.

இந்த எயார் பஸ்களை கொள்வனவு செய்வதற்காக முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ச வீட்டில் கூட்டம் நடத்தப்பட்டது. சமல் ராஜபக்சவின் மகனும் இந்த விடயத்துடன் தொடர்புபட்டுள்ளார். அவர் எயார் லங்கா நிறுவனத்திலும் பதவி வகித்துள்ளார் என்று ஊடக சந்திப்பில் அநுரகுமார திஸாநாயக்க வெளிப்படுத்தியுள்ளார்.

தேசிய மத்திய கலாசார நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான விவரங்களும் அநுரகுமாரவால் வெளியிடப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய மத்திய கலாசார நிதியத்தின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிதியம் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களின் எந்த அனுமதியும் இன்றி நிதியத்தின் பணம் செலவிடப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸவின் நேரடியான உத்தரவின் கீழேயே இந்தச் செயற்பாடுகள் செய்யப்பட்டன என்று சாட்சியமளிக்கப்பட்டுள்ளது என்று அநுரகுமார தெரிவித்தார்.

இந்த நிதி செலவு செய்யப்பட்ட பின்னர் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக அவசர பணிப்பாளர் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் ரணில் விக்கிரமசிங்க, ஜோன் அமரதுங்க, மங்கள சமரவீர, சஜித் பிரேமதாஸ, அகில விராஜ் காரியவசம், மனோ கணேசன், பேர்னாட் பிரியந்த ஆகியோர் இருந்தனர் என்ற தகவலையும் அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டார்.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மகனான யோஷித ராஜபக்சவின் காணிகள் தொடர்பான பல தகவல்களும் அநுரகுமார திஸாநாயக்கவால் வெளியிடப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் அமரர் ஆறுமுகம் தொண்டமான் தொடர்பான தகவல்களும் உள்ளன என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கால்நடை வள அமைச்சுப் பதவியை அவர் வகித்தபோது, வாகனங்களுக்கு எரிபொருளை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பான விவரங்களும் உள்ளன என்றும் அவர் கூறினார்.

அநுரகுமார திஸாநாயக்க வெளிப்படுத்தியுள்ள தகவல்களால் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (அ-எ-22)

## பதவி...

மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் இல்லத்தில் நடைபெற்றது. தேசிய இணக்கப்பாட்டு அரசை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, ராஜித சேனாரத்ன, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, கயந்த கருணாதிலக்க ஆகியோரும், சுயாதீன அணிகளின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் சிறிபாலடி சில்வா, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, தயாசிறி ஜயசேகர, டிரான் அலஸ், நிமல் லான்சா ஆகியோரும் பங்கேற்றனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை, பிரதி சபாநாயகர் தேர்வு உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன. ஜனாதிபதி பதவியில் கோத்தபாய ராஜபக்ச நீடிக்கும்வரை, இடைக்கால அரசில் இணைவது ஏற்புடைய விடயமல்ல என ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கத்துக்கு எந்த அடிப்படையில் ஆதரவு வழங்கலாம் என்பது தொடர்பாக கட்சி மட்டத்தில் கலந்துரையாடி முடிவு அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போதே பிரதமர் நாளை (இன்று ) பதவி விலகுவார், அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது என்று ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார். (அ-எ-44)

## சாவகச்சேரி...

யோகேஸ்வரன் திசாந்தன் (வயது-33) என்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரே உயிரிழந்தவராவார்.

சாவகச்சேரி , அஞ்சலக வீதிச் சந்தியில் அதிகாலை 1.30 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. கொடிகாமத்தில் நடந்த திவசம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு மோட்டார்சைக்கிளில் வீடு திரும்பிய போது, யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த தனியார் நிறுவனம் ஒன்றின் கப் ரக வாகனத்துடன் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. மோட்டார்சைக்கிளில் பயணித்த திசாந்தன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடல் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. கப் ரக வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-159-9)

## கோத்தா...

பண்டார, எதிரணி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியல்ல உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். இந்த இரு பிரேரணைகளையும் வெகு விரைவில் விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும் என்று சபாநாயகரிடம், எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கம் மீது நம்பிக்கையில்லை என்பதால் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரேரணைகளுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும், இதற்குத் தேவையான அழுத்தங்களை மக்கள் பிரயோகிக்க வேண்டும் எனவும் சஜித் அழைப்பு விடுத்தார்.

அதேவேளை, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி நாளை பிரேரணைகளை சபாநாயகர் விவாதத்துக்கு எடுக்கலாம் என எதிரணி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இது விடயம் தொடர்பில் சபாநாயகர், பக்கச்சார்பாக செயற்பட்டால் அவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என எச்சரிக்கை விடுத்தனர். ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும், அதன் அடிப்படையிலேயே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டது என்று லக்ஷ்மன் கிரியல்ல குறிப்பிட்டார். (அ-எ-44)

## பட்டப்பகலில்...

பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்தோர் நேற்று மதியம் ஒரு மணிநேரம் வெளியே சென்றிருந்த நிலையில், திரும்பி வந்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர்.

வீட்டில் இருந்த நான்கரைப் பவுண் நகைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ-எ-125)

## கிணற்றில்...

திருகோணமலையைச் சேர்ந்த பிரதாப் (வயது-37) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் கடற்றொழிலுக்காக முள்ளிவாய்க்கால் வந்து தங்கியிருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-19)

## ரயில்வே...

புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கம், ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம், ரயில்வே ஊழியர் சங்கம், ரயில்வே தொழில்நுட்ப வல்லுநர் சங்கம் உட்பட 40க்கும் அதிகமான ரயில்வே தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

அதேவேளை, எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நாடளாவிய ஹர்த்தாலுக்கு அரசாங்கம் பதிலளிக்காவிட்டால், எதிர்வரும் 11ஆம் திகதிமுதல் தொடர்ச்சியாக ஹர்த்தால் முன்னெடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## தமிழகம்...

என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களில் ஒருவர் சிறுவன் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் வேலணை [illegible] ஊடாகத் தமிழகத்துக்குப் படகில் செல்ல முயன்றனர் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்துக்கு தஞ்சம் கோரி படகுகள் மூலம் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (அ-எ-20)

## ஊழல்...

நிலையத்தின் இணை அமைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 6ஆம் திகதி நாட்டின் மிக முக்கியமான வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் ஹர்த்தால் நடத்தி ஊழல் மிக்க கோத்தபாய ராஜபக்ச மற்றும் ராஜபக்ச குடும்ப ஆட்சிக்கு இறுதி எச்சரிக்கையை வழங்குவோம். 6ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் புறப்படவேண்டும். நாட்டு மக்கள் அனைவரையும் இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்.

அனைவரும் கைகளை இணையுங்கள். அனைத்துப் பணிகளும் நிறுத்தப்படும், போக்குவரத்து நிறுத்தப்படும் ஒவ்வொருவரும் வீட்டிலிருந்து வெளியேவந்து அருகில் உள்ள வீதிக்குக் கறுப்புக் கொடியுடன் வாருங்கள். வீட்டில், நிறுவனங்களில் கறுப்புக் கொடிகளை ஏற்றுங்கள். நாட்டு மக்கள் இணைந்து ராஜபக்ச குடும்ப ஆட்சிக்கு எதிரான உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றலைக் காட்டுங்கள். ஹர்த்தாலை வெற்றியடையச் செய்யுங்கள்.

இந்த நாட்டில் உள்ள ஒட்டுமொத்த தொழிற்சங்க இயக்கமாகிய நாங்களும், இந்த நாட்டில் உள்ள அனைத்து வெகுஜன அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் இணைந்து இந்த அரசாங்கம் வீட்டுக்குச் செல்லும்வரை போராடுவோம். மக்கள் குரலை அரசாங்கம் செவிமடுக்காவிட்டால் எதிர்வரும் 11ஆம் திகதி மீண்டும் ஹர்த்தால் நடத்தப்படும் - என்றார்.

அதேவேளை, எதிர்காலத்தில் சுகாதார சேவையை உள்ளடக்கிய பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று சுகாதார நிபுணர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (அ-எ-இ)

## தவறணையில்...

கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கானவர் சுழிபுரத்தைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்றும், அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் நடந்துள்ளது. கத்திக்குத்துக்கு இலக்கான இளைஞன் வலந்தலை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம், வல்லையில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றில் மதுபோதையில் இளைஞர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் போத்தலால் குத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருந்தார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடு முழுவதும் நேற்று புனித நோன்புப் பெருநாள் கொண்டாடப்பட்ட நிலையில், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் இடம்பெற்றுவரும் காலிமுகத்திடலிலும் நோன்புப் பெருநாள் கொண்டாடப்பட்டது. பிக்குகள் மற்றும் அருட்தந்தையர்கள், பாதிரியார்கள் எனப் பல்வேறு மதத்தலைவர்களும் நோன்புப் பெருநாளில் பங்கெடுத்தனர். (க-இ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம்,மே 4

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், மானிப்பாய் - ஆனைக்கோட்டைப் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் 15 மில்லி கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது. குறித்த இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (க-125)


## வேலையாள்கள் தேவை

Lovely Flower Shop க்கு
யாழ் மற்றும் கிளிநொச்சி கிளைகளுக்கு
பெண் வேலையாள்கள் தேவை.
077 400 5023

## சிறுநீரகம் தேவை

0 – குறுாப் வகையைச்
சேர்ந்த சிறுநீரகம் தேவை.
077 797 0827, 076 928 1986

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு பிறந்த தனியார் துறையில் தொழில் புரியும் மணமகனுக்கு நன்கு படித்த பண்பான மணமகளை தேடுகின்றோம்.
077 359 7310
(CS 44484) (3/6)

## காணி விற்பனைக்கு

இல.314, ஸ்ரான்லி வீதியில் உள்ள
ஆரியகுளச்சந்திக்கு முன்பாக உள்ள
காணி விற்பனைக்குண்டு.
077 817 5926

## அன்னை முத்துமாரி பஸ் சேவை

தற்பொழுது ஒரே நிர்வாகத்தின் கீழ்
Village Hotel எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எமது சேவை தற்பொழுது வழமைக்குத் திரும்பியுள்ளது
என்பதனை வாடிக்கையாளர்களுக்கு
அன்புடன் அறியத்தருகின்றோம்.

மற்றுமொரு சேவை காரைநகரில் இருந்து K.K.S
நெல்லியடி, கொடிகாமம் ஊடாக கொழும்பை சென்றடையும்
Hotline- 077 544 8503
077 077 7775

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளானில் ஒட்டகப்புலத்தில் 15 பரப்புக் காணி 2 பரப் பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

- அச்சுவேலி தெல்லிப்பழை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பிரதான வீதியில் இருந்து 50 M தூரத்தில்
- ஒட்டகப்புலம் றோ.க.த.க. பாடசாலைக்கு அருகாமையில் 14 அடி பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 02 KM தூரத்தில்
- பரப்பின் விலை 5 லட்சம்

தொடர்பு: 077 9116 983

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் நிரப்புனர், கணக்காளர் தேவை. 06.05.2022 முற்பகல் 11.00 மணிக்கு பின்னர் நேரில்வரவும்.
(cs 444871) (2.6)

முகவரி:
ராஜன் உமையாள் எரிபொருள் நிரப்பு நிலையம்
மணிக்கூட்டுகோபுர வீதி
(மகாத்மா காந்தி வீதி) யாழ்ப்பாணம்.

## ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர்களுக்கான விசேட ஒன்று கூடல்

எமது கல்லூரியின் 150ஆவது யூபிலி
விழாவை முன்னிட்டு
எதிர்வரும் (08.05.2022) ஞாயிற்றுக்கிழமை

அனைத்து பழைய மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் கல்லூரி மண்டபத்தில் மாலை 4.00மணிக்கு இடம்பெறும் அனைத்து பழைய மாணவர்களும் தவறாது இச்கூட்டத்தில் கலந்துகொள்ளவும்.

Regret fot not giving individual letters

செயலாளர்,
Mr.J.அன்ரனி

அதிபர்,
ST.ANTONY'S
COLLEGE KAYTS.
(cs 444751) (2.6)


# மரண அறிவித்தல்



பிறப்பு 18.05.1944

இறப்பு 02.05.2022

## திரு. சோமசுந்தரம் தங்கராசா

### (வி லக்கி ஸ்ரார் உரிமையாளர்)

கச்சேரி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தங்கராசா நேற்றுமுன்தினம் (02.05.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், குமளேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், மேனராஜ், ஜனராஜ் (அவுஸ்ரேலியா), லக்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் அர்ச்சனா, சிவஷைலஜா, ஆதவன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கனகராசா, தர்மராசா, சண்முகராசா மற்றும் மகேஸ்வரி (ஜெயராணி), செல்வராணி ஆகியோரின் அன்பு சகோதரரும், கோமளேஸ்வரி, சுந்தரலிங்கம், மகேந்திரலிங்கம், சந்திரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் க்ரித்திஸ், மனுயுக்தன் ஆகியோரின் அன்பு பேரனும் திரு.திருமதி ஶ்ரீபாலா, திரு.திருமதி ஜெயக்குமார், திருமதி வசந்தகுமாரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் ,இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

278A, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 19593) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.